# பனிமயம்

ஆகஸ்டு 2026



ஆண்டுச் சந்தா
ரூ. 100/-

தனிப் பிரதி
விலை ரூ. 10/-



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

பனிமயத் தாயின் அன்பு பிள்ளைகளுக்கு பங்குத்தந்தையாகிய நான் முதற்கண் ஜெபத்துடன் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்னையின் 444ஆம் ஆண்டு திருவிழாவினை இவ்வாண்டு நாம் ஜூலை 26ஆம் தேதி ஆடம்பரமாக தொடங்குகிறோம். மிகச்சிறப்பான விதத்திலே ஆன்மீக காரியங்களுக்கு இங்கே ,முக்கியத்துவம் கொடுக்கிறோம். அதையே, நாம் முழு உள்ளத்தோடு எதிர்பார்க்கிறோம். அன்னையின் ஆசீர், அன்னையினுடைய பரிந்துரை, நமக்கு நிறைவாக கிடைக்கவேண்டும். வாழ்க்கையில் நமக்கு எது மிஞ்சி இருக்கிறது? அன்னையின் பரிந்துரையும், அவருடைய திருமகனின் மீட்பும்தான். இந்த ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு ஆன்மத் தயாரிப்போடு இந்த திருவிழாவைக் கொண்டாட உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறேன். சிறப்பாக ஜூலை 25ஆம் தேதி மாலை அன்னையின் கொடி சுமந்து வரப்பட்டு, அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 26ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

அடுத்து நவநாட்களில் தகுந்த ஒப்புரவு அருட்சாதனம் பெற்று, அன்னையின் ஆசீர்வாதத்தை நீங்கள் நிறைவாகப் பெற்றுக்கொள்ள உங்களை அன்போடு அழைக்கிறேன். உங்கள் அனைவரின் குடும்பத்துக்காகவும் ஜெபிக்கிறேன்.

நம்முடைய பங்கின் வரலாறு மிக அழகாக சொல்கிறது, 1712ஆம் ஆண்டுகளில் திருவிழா மிக பக்தி சிறப்புடன் நம் முன்னோர்கள் கொண்டாடினர். அதை வாசிக்கும் பொழுது உள்ளமும் மனமும் பூரிப்படைகின்றது. ஏனென்றால், அன்றைய பங்குக்குருவாக இருந்த விஜிலியுஸ் மான்சி தலைமையில் நடைபெற்ற திருவிழாவிலே வானவேடிக்கைகள், விளையாட்டுகள், ஆடம்பர கொண்டாட்டங்கள் என அனைத்தும் இருந்தன. ஆனால் இதில் என்ன சிறப்பு, அன்னையின் பக்தர்கள் அந்த 10 நாட்களிலே 600 பேர் பாவசங்கீர்த்தனம் செய்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இறைவனுடைய அருளைப் பெறவேண்டும் என்றால், ஆன்மீகத் தூய்மை அதாவது ஒப்புரவு அருட்சாதனம் மிகவும் முக்கியம் என்பதை நம்முடைய முன்னோர்களின் கொண்டாட்டத்திலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம்.

இந்நாட்களில் கொண்டாட்டங்கள் பலவாய் இருந்தாலும், ஒருவரையொருவர் சந்திப்பதிலே மகிழ்ச்சி ஆரவாரம் கொண்டாலும், நாம் அன்னையினுடைய பரிந்துரையின் அடிப்படையில் தேவஆசீர்வாதத்தை நம் இல்லங்களுக்கு பெற்றுச் செல்ல மனத்தூய்மையோடு திருவிழாவை கொண்டாட வரும்படி அன்போடு அழைக்கிறேன்.

திருவிழாவில் சிறப்பாக, ஆகஸ்ட் மாதம் 02ஆம் தேதி ஞாயிறன்று மாலை நடைபெறும் நற்கருணைப்பவனியில் கலந்துகொண்டு நற்கருணை ஆண்டவரின் ஆசீர்வாதத்தை நமதாக்குவோமாக. வழக்கம் போல 04ஆம் தேதி, மாலைஆராதனையையும், 05ஆம் தேதி அன்னையின் திருவிழா திருப்பலியையும் கொண்டாடி அன்னையை மகிமைப்படுத்த அழைக்கிறோம். உலக மக்கள் எல்லாரும் சேமமுற வாழவும், நம்முடைய நாட்டு மக்கள் எவ்வித விபத்துகள், ஆபத்துகள் இன்றி மத சுதந்திரத்தோடு வாழ்க்கை நடத்தவும், நம் தேசத்தை அருள் நிறைந்த சன்மார்க்கர்கள் ஆளவும், இறையருளை இறைஞ்சுவோமாக. உங்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த பனிமயத் தாயின் 444ஆவது ஆண்டு திருவிழா நல்வாழ்த்துகளை தெரிவிப்பதிலே மெத்த மகிழ்ச்சிஅடைகிறேன். உங்களுக்காக ஜெபிப்பதிலே ஒல்லும் வகையில் இன்பம் காண்கிறேன். இறையருள் நம்மை காப்பதாக.

தங்கள் அன்புடன்,

**அருள்தந்தை S. ஜான்செல்வம்**

திருத்தல அதிபர் & பங்குத்தந்தை






உதயம் 27 தாரகை 12

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. S. ஜான் செல்வம்**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. S. ஜான் செல்வம்



### பனிமயம் விளம்பர விபரங்கள்

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 100

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
✆ 82209 47823, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### நகரங்களில் நற்செய்தி அறிவிப்புக்காக...

அடையாளமின்மை, தனிமை ஆகியவற்றால் குறிக்கப்பட்ட பெருநகரங்களில், நற்செய்தி அறிவிப்புக்குப் புதிய வழிகளைக் கண்டறியவும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆக்கப்பூர்வமான பாதைகளைக் கண்டறியவும் இறை வேண்டல் செய்வோம்.

# உள்ளே...



மரியாவின் மாண்புகள் 4


இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் 6


தாங்கிக் கொள்ளும் விழுது அன்னை மரியா 8


பனிமயத்தாய் இறைவனின் திருக்கோயில் 10


இறைவனின் மீட்புத் திட்டத்தில் பனிமயத் தாய் 12


பனிமயத் தாய் பேராலய வரலாறு 14


இரண்டு குருவிகள் 15


விவிலியப் போட்டி 16

பனிமயப் பகிர்வு 19


பெருவிழா தொடர்பான அறிவிப்புகள் 20



# மரியாவின் மாண்புகள்

## 2 இறைவனின் தாய்



நம் அன்றாட இறை வேண்டலில் "புனித மரியே, இறைவனின் தாயே" என்று மிக எளிதாகவும், இயல்பாகவும் மன்றாடி விடுகிறோம். ஆனால், ஐந்தாம் நூற்றாண்டில் இப்பெயர் மிகப்பெரிய இறையியல் வாதங்களை உருவாக்கியது என்பதை நம்மில் பலரும் அறிந்திருப்பதில்லை. அதுமட்டுமல்ல, கடந்த 21 நூற்றாண்டுகளிலும் மரியன்னை வணக்கத்துக்கு எதிராக எழுந்த எத்தனையோ தப்பறைகள்,போதனைகள், இறையியல் பேதங்கள் அனைத்திலும் மிக முதன்மையானது மரியாவை இறைவனின் தாய் என்று அழைப்பது பற்றியே என்பதுவும் நம் கவனத்தை ஈர்க்கிறது.

மரியாவை "இறைவனின் அன்னை" எனத் தொடக்கக் காலத்திலிருந்தே திருஅவை அழைத்து வந்திருக்கிறது. மூன்றாம் நூற்றாண்டிலேயே "இறையன்னை" எனப் பொருள்படும் "தியோடோக்கோஸ்" என்னும் கிரேக்க சொல்லாடல் புழக்கத்தில் இருந்தது. கி.பி. 250ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மரியன்னை மன்றாட்டு ஒன்றில் மரியா இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால், ஐந்தாம் நூற்றாண்டில் இந்தப் பெயர் தொடர்பான சர்ச்சைகள் தொடங்கின. கான்ஸ்டான்டிநோபிளின் ஆயர் **நெஸ்தோரியஸ்** மரியாவை "தியோடோக்கோஸ்" (இறைவனின் அன்னை) என்று அழைக்காமல், "கிறிஸ்டோக்கோஸ்" (கிறிஸ்துவின் அன்னை) என்றே அழைக்க வேண்டும் என்றார். மரியாவை இறைவனின் அன்னை என்று அழைப்பது, இறைவன் தொடக்கம் உள்ளவர் என்னும் இறையியல் பிழைக்கும், இயேசுவின் இறைத்தன்மை பெண்ணிடம் இருந்து வந்தது என்னும் பிழைக்கும் இட்டுச் செல்லும் என்று வாதிட்டார். அவரது வாதத்தைப் பலரும் ஆதரித்தனர்.

ஆனால், அலெக்சாண்ட்ரியா நகர புனித **சிரில்,** நெஸ்தோரியசின் வாதங்களைக் கண்டித்தார். இயேசு மெய்யான கடவுள். மரியா இயேசுவின் தாய். எனவே, மரியாவைக் கடவுளின் தாய் என அழைப்பது தகுதியே என்று வாதிட்டார்.

இந்த இறையியல் சிக்கலைத் தீர்க்க கி.பி. 431ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட எபேசு திருச்சங்கம் "மரியா கடவுளின் தாய்" என்பதை ஒரு நம்பிக்கைப் பேருண்மையாக (Dogma) அறிக்கையிட்டது.

இந்த பேருண்மையின் பின்னால் பல இறையியல் உண்மைகள் மறைந்துள்ளன. இது வெறுமனே மரியாவைப் பற்றிய ஓர் இறையியல் விவாதம் அல்ல. மாறாக, இயேசுவின் மானிடப் பிறப்பு (மனிதாவதாரம்) பற்றிய விளக்கமும்கூட. இயேசு மெய்யான மனிதரும், மெய்யான கடவுளும் என்று கி.பி. 325ஆம் ஆண்டு கூடிய நீசே திருச்சங்கம் பறைசாற்றியிருந்தது. எனவே, மரியா இறைவனின் தாய் என்பதை மறுத்தால், அது இயேசுவின் இறைமையையே மறுப்பதாகும்



என வாதிட்டனர் திருஅவைத் தந்தையர். மரியா இறைவனுக்கு இணையானவர் என்றோ, இயேசுவை மரியாதான் உண்டாக்கினார் என்றோ எவரும் பொருள் கொள்ளவில்லை. மாறாக, கடவுளின் மீட்புத் திட்டத்தில் அவர் இயேசுவைக் கருத்தாங்க கடவுளாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதே உண்மை.

இறையியல் வாதங்களோடு, விவிலியச் சான்றுகளும் மரியா இறைவனின் தாய் என்பதற்கு வலுசேர்க்கின்றன. “இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்; அக்குழந்தைக்கு அவள் ‘இம்மானுவேல்’ என்று பெயரிடுவார்” (எசா 7:14) என்று பழைய ஏற்பாட்டிலேயே முன்னுரைக்கப்பட்டபடி, கன்னியாம் மரியா கருவுற்று இம்மானுவேலாம் இயேசுவை ஈன்றெடுத்தார். இதனை மேற்கோளாகக் காட்டும் நற்செய்தியாளர் மத்தேயு ‘இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்’ என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவையாவும் நிகழ்ந்தன” (மத் 1: 22-23) என்று உறுதிப்படுத்தியுள்ளார்.

கலாத்தியர் திருமடலில் “காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் **தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும்** திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்” (கலா 4:4-5) என்று பவுலடியார் எழுதியபோது, இயேசு கடவுளின் மகன் என்பதையும், அவர் மரியா என்னும் பெண்ணிடம் பிறந்தவர் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

இருப்பினும், மரியா இறைவனின் தாய் என அழைக்கப்படுவதற்கான மிகச் சிறந்த சான்றை லூக்கா நற்செய்தியில் காண்கிறோம். மரியா எலிசபெத்தைச் சந்திக்கச் சென்றபோது, அவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு (லூக் 1:41), ‘பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே! என் **ஆண்டவரின் தாய்** என்னிடம் வர நான் யார்?’ (லூக் 1:42-44) என்றார். தூய ஆவியாரால் தூண்டப்பட்டே எலிசபெத்து மரியாவை ஆண்டவரின் தாய்” என்று அழைத்தார். இதுவே மிக உறுதியான விவிலியச் சான்று. “ஆண்டவர்” என்பதன் கிரேக்கச் சொல்லான “க்யூரியோஸ்” என்பதே யாவே இறைவனின் பெயருக்கும் கிரேக்க மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது கவனத்துக்குரியது.

இன்று கத்தோலிக்கத் திருஅவை தவிர்த்து, கீழை ஆர்த்தடாக்ஸ் திருஅவைகள், லூத்தரன் திருஅவை, ஆங்கிலிக்கன் திருஅவை ஆகியவற்றைச் சேர்ந்த கிறித்தவர்களும் மரியா இறைவனின் தாய் என்னும் பெயரை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், சில சீர்திருத்த அவையினர் மற்றும் பெந்தகோஸ்தே சபையினர் இப்பெயரை ஏற்க மறுக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், மரியா இறைவனின் தாய் என்பது மரியாவைச் சுட்டுவதைவிட, இயேசுவின் இறைமையைச் சுட்டுகிறது என்பதை அவர்கள் அறியவில்லை என்பதுதான். இப்பெயர் மரியா யார் என்பதைவிட, இயேசு யார் என்பதையே குறிக்கிறது என்பதுதான் எபேசு திருச்சங்க (கிபி 431) வரலாறு. இயேசு உண்மையான கடவுளும், உண்மையான மனிதனும் இணைந்த ஒரே ஆள் என்பது கிறித்தவத்தின் அடிப்படையான நம்பிக்கை. அத்தகைய இயேசுவின் தாய் மரியா என்பதையே இப்பெயர் சுட்டுகிறது.



அருட்பணி. குமார்ராஜா



# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

# அன்னை மரியா



## மரியா நமக்குத் தாய்

“இறைவாக்கு மனிதர் ஆனதின் காரணமாக கடவுளின் பராமரிப்புத் திட்டத்தில் நித்தியத்திலிருந்தே **கடவுளின் தாய்** என முன் நியமனம் பெற்றவர் தூய கன்னி. இவ்வுலகில் இவர் இறை மீட்பரின் அன்பு அன்னையாகவும், எவரையும் விஞ்சும் முறையிலே ஆண்டவரோடு தாராளமாக ஒத்துழைத்த துணையாளராகவும் மனத்தாழ்மை கொண்ட அடியாராகவும் விளங்கினார். கிறிஸ்துவைக் கருத்தாங்கிப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்தார்; கோயிலில் தந்தைக்கு அர்ப்பணித்து, இறுதியாகச் சிலுவையில் உயிர்விடும் தம் மகனோடு அவரும் துன்புற்றார். இவ்வாறு, மனிதருக்கு அருள் வாழ்வைத் திரும்பப் பெற்றுத் தரக் கீழ்ப்படிதல், நம்பிக்கை, எதிர்நோக்கு, பற்றி எரியும் அன்பு என்பவற்றால் நிறைவாழ்வு அலுவலில் மிகச் சிறப்பான விதத்தில் ஒத்துழைத்தார். இதனால்தான் அருள் நிலையைப் பொறுத்தமட்டில் மரியா நமக்குத் தாயாக அமைந்தார்” – திருச்சபை எண் : 61.

## நிறைவாழ்வு அலுவலில் மரியா

“வானவர் தூது சொல்ல வந்த நேரத்தில் நம்பிக்கையுடன் தாம் அளித்த இசைவைக் கன்னி மரியா சிலுவை வரை தயங்காது காத்து வந்தார். இவ்வாறு இசைவளித்த நேரத்தில் இருந்து தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் முடிவில்லா நிறைவு பெறும் வரை அருள் திட்டத்தின்படி மரியாவின் தாய்மையும் தடையின்றி நீடிக்கும். ஏனெனில், விண்ணேற்றத்திற்குப் பின்பும் இந்நிறைவாழ்வு அலுவலை அவர் விட்டுவிடவில்லை. மாறாக, பல விதங்களில் பரிந்துபேசி நிலையான நிறைவாழ்வடைய நமக்குத் தேவையான கொடைகளை எப்போதும் பெற்றுத் தருகின்றார். பல



இன்னல் இக்கட்டுகளிடையே இன்னும் பயணம் செய்து கொண்டிருக்கும் தம் மகனின் சகோதரர் சகோதரிகளை, அவர்கள் தங்கள் மகிழ்ச்சி நிறை தாய்நாடு வந்து சேரும்வரை, தாய்க்குரிய அன்போடு காத்து வருகின்றார். எனவேதான், **கன்னி மரியா திருச்சபையிலே பரிந்துரைப்பவர், துணையாக நிற்பவர், உதவி அளிப்பவர், எனப் பல சிறப்புப்** பெயர்களால் போற்றப் பெறுகிறார். கன்னி மரியாவின் இந்நிலை ஒரே இணைப்பாளரான கிறிஸ்துவின் மாண்பையும் பயன்தரும் ஆற்றலையும் சிறிதளவும் குறைக்கவோ கூட்டவோ செய்வதில்லை என நாம் நன்கு உணர வேண்டும்” - திருச்சபை எண் : 62.

## வாழ்வோரின் தாய்

“இறை அன்னை முற்றிலும் தூயவர், பாவக்கறை ஏதுமில்லாதவர், தூய ஆவியினால் புதிய படைப்பாக உருவாக்கப் பெற்றவர். கருவான முதல் நொடியிலிருந்தே தனிச் சிறப்பான தூய்மையின் மாட்சியால் அணி செய்யப்பட்டிருந்த நாசரேத்துக் கன்னியை, கடவுளின் ஆணையால் தூது சொல்ல வந்த வானதூதர் “அருள்மிகப் பெற்றவரே” என்று வாழ்த்துகின்றார். இக்கன்னியும், “நான் ஆண்டவரின் அடிமை; உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என மறுமொழி கூறுகின்றார். இவ்வாறு ஆதாமின் மகளான மரியா, கடவுள் வாக்குக்கு இசைவு அளித்ததால் இயேசுவின் தாயானார். பாவத்தடையின்றித் தன் முழு இதயத்தோடு கடவுளின் மீட்புத் திருவுளத்தை ஏற்றுத் தம் மகனுக்கும் அவரின் அலுவலுக்கும் தம்மையே ஆண்டவரின் அடிமையாக அவர் முற்றிலும் கையளித்தார். இவ்வாறு, அவருக்குக் கீழும் அவருடனும் எல்லாம் வல்ல கடவுளின் அருளால், மீட்புத் திட்டத்தில் மரியா பணிபுரிந்தார். எனவே, கடவுளின் கையில் செயலற்ற ஒரு கருவியல்ல. மாறாக, நம்பிக்கையாலும் கீழ்ப்படிதலாலும் மனித இனத்தின் நிறைவாழ்வுக்குத் தன்னுரிமையுடன் ஒத்துழைத்தவர் எனத் திருத்தந்தையர் கருதுவது சரியே. தூய இரேனேயு கூறுவதுபோல, “மரியா தன் கீழ்ப்படிதலால் தானும் மனித இனம் அனைத்தும் நிறைவாழ்வு பெறக் காரணமானார்”

“ஏவாளின் கீழ்ப்படியாமையால் விளைந்த முடிச்சு மரியாவின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப்பட்டது; நம்பிக்கையின்மையால் கன்னி ஏவாள் கட்டியதை நம்பிக்கையால் கன்னி மரியா அவிழ்த்துவிட்டார்”. ஏவாளோடு ஒப்பிட்டு மரியாவை “வாழ்வோரின் தாய்” எனவும் பழங்காலத் தந்தையர் அழைக்கின்றனர். “ஏவாளால் சாவு, மரியாவால் வாழ்வு” எனத் திரும்பத்திரும்ப எடுத்துரைக்கின்றனர். - திருச்சபை எண் : 56.

*தொகுத்தளிப்பவர் :* **கலாபன் வாஸ்**

## *வரவேற்கிறோம்*



## திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 16. | மரிய ஷிலோ | ஆக்னல் காஸ்பின் - மோனிஷா | 28.06.2026 | சூசையப்பர் |

# தாங்கிக் கொள்ளும் விழுது அன்னை மரியார்

**மனித வாழ்க்கை என்**பது ஒரு பயணம். அந்தப் பயணம் எப்போதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பாதையாக இருக்காது.

முட்களும், கண்ணீரும், சுமைகளும் நிறைந்த பாதையாக இருக்கும். மனிதன் பல நேரங்களில் தன் வாழ்வின் சுமைகளைத் தாங்க முடியாமல் தளர்ந்து விடுகிறான். அப்போது அவனைத் தாங்கி நிறுத்தும் ஒரு "விழுது" அவனுக்குத் தேவைப்படுகிறது. அந்த விழுதாகவே, உலகின் எல்லா மக்களுக்கும் அன்னை மரியா திகழ்கிறாள். அன்னை ஒரு சாதாரண பெண்ணாக மட்டும் அல்ல, கடவுளின் அருளை மனித வாழ்வில் இணைக்கும் கருணையின் பாலமாகவும், துன்பத்தில் தாங்கும் தாயாகவும், நம்பிக்கையின் ஒளியாகவும் விளங்குகிறாள்.




அன்னை மரியாவின் வாழ்க்கையின் ஆழம், அன்னை சொன்ன ஒரு வார்த்தையில் வெளிப்படுகிறது: "நான், ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா 1:38) என்று அன்னை தன்னை கடவுளின் விருப்பத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தாள். மனிதன் தன் வாழ்க்கையில் துன்பங்களை சந்திக்கும்போது, அன்னையைப் போல கடவுளிடம் ஒப்புக்கொடுக்க கற்றுக் கொள்கிறான்.

அன்னை வாழ்ந்த விதமே ஒரு போதனை. பெத்லகேமில் ஒரு எளிய சூழலில் இயேசுவைப் பெற்றெடுத்தாள். அங்கு அவளுக்குக் கிடைத்தது ஆடம்பரம் அல்ல, வறுமை. இருந்தாலும், அன்னை குறை கூறவில்லை. இதுவே அன்னை தாங்கும் விழுதாக மாறிய முதல் அடையாளம். மனிதன் சுகத்திலும் அல்ல, துன்பத்திலும் கடவுளின் அருளை காண வேண்டும் என்பதை அன்னை தனது வாழ்க்கையால் எடுத்துக் காட்டினாள்.

விவிலியத்தில் அன்னை மரியாவின் பரிந்துரையின் மிகத் தெளிவான வெளிப்பாடு கானாவூர் கல்யாணத்தில் காணப்படுகிறது (யோவான் 2:1-11). அங்கு திராட்சை ரசம் இல்லாமல் போனது ஒரு சிறிய விஷயமாகத் தோன்றலாம். ஆனால் அந்த சமுதாயத்தில் அது ஒரு பெரிய அவமானமாக இருந்தது. அந்த அவமானத்தை அன்னை மரியா மிகவும் நுண்ணுணர்வுடன் கவனித்தாள். மனிதர்களின் தேவையை அறிந்து, அதை கடவுளிடம் எடுத்துச் செல்லும் ஒரு தாயின் இதயம் அவளுக்கு இருந்தது. "அவர்களுக்குத் திராட்சை ரசம் இல்லை" என்று இயேசுவிடம் சொல்லிய அந்த ஒரு வாக்கியம், அவளது பரிந்துரையின் ஆழத்தைக் காட்டுகிறது.

இயேசு, "என் நேரம் இன்னும் வரவில்லை" என்று கூறியபோதும், அன்னை மரியாவின் நம்பிக்கை சிதறவில்லை. அன்னை பணியாளர்களிடம், "அவர் சொல்வதை எல்லாம் செய்யுங்கள்" என்று கூறினாள். இந்த ஒரு வாக்கியம் கிறிஸ்தவ வாழ்க்கையின் மையமாகும். அன்னை மரியா எப்போதும் நம்மை இயேசுவிடம் கொண்டு செல்கிறாள்.



அன்னை தன்னிடம் நம்மை நிறுத்தாமல், கடவுளின் சித்தத்திற்கு கீழ்ப்படிவதற்கே வழிகாட்டுகிறாள். அவளது இந்த உறுதியான நம்பிக்கையால்தான் முதல் அற்புதம் நிகழ்ந்தது. இதன் மூலம், அன்னை மனிதர்களுக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கும் கருணை நிறைந்த விழுதாக வெளிப்படுகிறாள்.

அன்னை மரியாவின் தாங்கும் சக்தி, சிலுவையின் அடியில் உச்சத்தை அடைகிறது (யோவான் 19:25). தன் மகன் வேதனையில் துடிக்கிறதை நேரில் காணும் தாயின் இதயம் எவ்வளவு துன்பப்படுமோ, அதைவிட ஆழமான வேதனையை அன்னை அனுபவித்தாள். இருந்தாலும், அன்னை நின்றாள். உறுதியுடன், நம்பிக்கையுடன். அன்னை விழுந்துவிடவில்லை, உடைந்து போகவில்லை. அந்த நேரத்தில் இயேசு, “இதோ, உன் தாய்” என்று கூறி, அன்னையை மனித குலத்தின் தாயாக அளித்தார். அந்த தருணத்திலிருந்து, அன்னை ஒவ்வொரு மனிதனின் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் தாயாக மாறினாள். நம்முடைய கண்ணீரை புரிந்துகொள்ளும், நம்முடைய வேதனையை உணரும் தாயாக அன்னை நம்மோடு இருக்கிறாள்.

அன்னை மரியாவின் உதவி எப்போதும் அமைதியானதாக இருக்கும். அன்னை வெளிப்படையாக பேசாமல், நம்முடைய உள்ளத்தில் நம்பிக்கையை விதைக்கிறாள். பலரின் வாழ்க்கையில் அவளது பரிந்துரையால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நோய்களால் அவதிப்பட்டவர்கள் ஆறுதல் பெற்றுள்ளனர். குடும்பப் பிரச்சினைகளில் சிக்கியவர்கள் அமைதியைக் கண்டுள்ளனர். வாழ்க்கையின் இருளில் தத்தளித்தவர்கள் ஒளியைக் கண்டுள்ளனர். அன்னை எப்போதும் மனிதனை இயேசுவின் கரங்களில் ஒப்படைக்கிறாள். அவளது உதவி மனிதனை கடவுளிடமிருந்து விலக்குவதல்ல. மாறாக, அவரிடம் நெருக்கமாக்குகிறது.

இன்றைய உலகில் மனிதன் பலவிதமான அழுத்தங்களால் பாதிக்கப்பட்டிருக்கிறான். இப்படியான சூழலில், அன்னை மரியா ஒரு தாங்கும் விழுதாக நம்மை அணைக்கிறாள். நாம் சோர்வடையும்போது, அன்னை நம்மை தூக்கி நிறுத்துகிறாள். நாம் வழி தவறும்போது, அன்னை நம்மை சரியான பாதைக்கு அழைத்துச் செல்கிறாள். நாம் நம்பிக்கை இழக்கும்போது, அன்னை நமக்கு நம்பிக்கையை ஊட்டுகிறாள்.

அன்னை மரியாவை அணுகும் ஒருவர் ஒருபோதும் வெறுமனே திரும்ப மாட்டார். அவளது கருணை எப்போதும் செயல்படும். அவர் நம் தாய் என்பதால், தன் பிள்ளைகளின் தேவைகளை மறக்க மாட்டாள். நம்முடைய சிறிய வேண்டுதல்களையும் அன்னை கவனிக்கிறாள். நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் சிறிய மாற்றங்களிலிருந்து பெரிய அதிசயங்கள் வரை, அவளது பரிந்துரை செயல்படுகிறது. அன்னை நம்முடைய வாழ்க்கையின் சுமைகளை மட்டும் தாங்குவதில்லை, நம்மை உறுதியாக நிறுத்துகிறாள். அன்னை நம்மை பாதுகாக்கிறாள், வழிநடத்துகிறாள், கடவுளின் அன்பை நமக்கு உணர்த்துகிறாள். அன்னை நம்முடைய வாழ்க்கையில் இருக்கும்போது, நாம் ஒருபோதும் தனியாக இல்லை.

எனவே, நாம் அனைவரும் அன்னை மரியாவை நம்பிக்கையுடன் அணுக வேண்டும். அவளது பரிந்துரையை நாட வேண்டும். அன்னை காட்டும் பாதையில் இயேசுவை நோக்கிச் செல்ல வேண்டும். அப்பொழுது நமது வாழ்க்கை துன்பங்களால் நிரம்பியதாக இருந்தாலும், அது அர்த்தமுள்ளதாய், அமைதியும், நம்பிக்கையும் நிரம்பியதாக மாறும். அன்னை மரியா நம்மைத் தாங்கி நிறுத்தும் விழுது. அவள் என்றென்றும் நம்மோடு இருப்பாள்.



அருட்சகோதரர் மைக்சன்



# பனிமயத்தாய்

## இறைவனின் திருக்கோயில்



நம் மக்களின் அன்றாட வாழ்வுகளுக்கும், சிறப்பு நிகழ்வுகளுக்கும் மையமாக அமைவது திருக்கோயில்கள். தங்களுடைய தனி அல்லது குடும்ப வாழ்வின் முக்கிய நிகழ்வு எதுவெனிலும் முதலில் கோயிலுக்குச் சென்று, இறைவனை வழிப்பட்ட பிறகே அந்நிகழ்வைத் தொடங்குவர்.

“கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்” - ஔவையார் கூற்று. .கோயில் (கோ+இல்) என்றால் கடவுளின் வீடு அல்லது உறைவிடம் என்பது பொருள். தங்களது வீடு சிறியதாக இருந்தாலும் கடவுள் குடியிருக்கும் இல்லம் பெரியதாகவும், உயர்ந்த கோபுரங்களோடும், பளபளக்கும் கொடிமரங்களையும் கொண்டு, ஆடம்பரமாக கோயில் திருவிழாக்களைக் கொண்டாடுவதில் மக்களின் ஆர்வம் அதிகம்.

யூத மக்கள் கடவுள் தங்களோடு இருக்கிறார் என்றும் அவருடைய குடியிருப்பு எருசலேம் ஆலயத்தில் உள்ளது என்ற நம்பிக்கையில் ஆலயம் உள்ள திசையை நோக்கி வழிபடுவர்.

“வானமும் வான மண்டலங்களும் உம்மைக் கொள்ள இயலாதிருக்க நான் கட்டியுள்ள இக்கோவில் எப்படி உம்மைக் கொள்ளும்?” (1அர 8:27). “மனிதர் கையால் கட்டிய திருக்கோவில்களில் இறைவன் குடியிருப்பதில்லை” - புனித பவுல் (தி.ப 17:24)

தூய்மையான ஒவ்வொரு மக்களின் உள்ளமும் இறைவனின் திருக்கோயிலே என்பது இயேசுவின் உறுதிப்பாடு. (யோவா 2:9) மூவொரு இறைவனின் திரு அவையே என்பது நம்பிக்கையாளர்களின் அனுபவம்.

“நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? கடவுளின் கோவில் தூயது, நீங்களே அக்கோவில்” (1கொரி 3:16,17).

கடவுளின் உயர்வான, உயிருள்ள கோயில் என்னும் உண்மை முதன்முதலில் வரலாற்றில்



முழுமையாக ஆக்கம் பெற்றது அன்னை மரியாவில் தான். ஏனெனில் அவரது உள்ளம் மட்டுமின்றி அவரது உதரமும், மடியும் ஏன் உடல் முழுவதும் கடவுள் குடியிருந்த கோயிலாக இருக்கிறது.

“இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்; ......உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்” (லூக் 1:31-32).

“உம் சொற்படியே ஆகட்டும்” (லூக் 1:38) மரியா தன் அன்பாலும், நம்பிக்கையாலும், அர்ப்பணிப்பாலும் தம் உள்ளத்தில் இறைவனுக்குக் கோயில் செய்தார். இறைவார்த்தை அவரது உயிரில் இணைந்து, உதிரத்தில் கலந்து, உதரத்தில் மனித உருவில் உருவில் கருவாகி குடிகொள்கிறார்.

“பனித்துளியைப்போல் ஆன்மாவின் வழி நடந்தால் அதுவே கடவுளின் வழி” - மாக்ஸிம் காரக்கி.

இறைவன் எங்கும் இருந்தாலும், மக்களின் நம்பிக்கையும் அன்பும் ஆறுதலும் தரும் இடமாக இருப்பது திருக்கோயிலன்றோ? கோயிலில் “ஆனமட்டும் அழுது விட்டால் அமைதி பிறக்குமே?” இறைவனின் அன்பு, ஆறுதல், மன்னிப்பின் மகிழ்வும் கிடைப்பது திருக்கோயிலில் அன்றோ? அனுபவம் பதில் சொல்லும் “தேவன் இருக்குமிடம் தேவாலயம்”.

“எந்த ஆன்மா தூய்மைப்பெற வேண்டி திருத்தலங்களையும் திரு மறைகளையும் வகுத்துக் கொடுத்தார்களோ, அந்த மனம் தகுந்த பக்குவப்படுமானால் அதுவே திருக்கோயிலாகும்”.

ஒரு குடும்ப வாழ்வு நிறைவுள்ளதாக இருந்தாலும், அந்த தம்பதியருக்கு குழந்தைப்பேறு இல்லையெனில் அப்பெண் “மலடி” என்று பலரால் இகழப்படுகிறாள். கி.பி. 352 ஆம் ஆண்டில் இத்தாலி நாட்டில் உரோமாபுரியில் அரசகுலத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்த ஜான் தம்பதியினருக்கு குழந்தைச் செல்வம் இல்லை. அன்னை மரியிடம் செபிக்கும் போது, அவர் கனவில் மரியா தோன்றி, தனக்கு எஸ்கலின் மலையுச்சியில் ஒரு கோயில் கட்டும்படி பணிக்கிறார்.

அதே நேரத்தில் திருத்தந்தை லிபோரியும் கனவில் கண்டு, இருவரும் மறுநாள் எஸ்கலின் மலையுச்சியில் சந்திக்க, அங்கு கோயில் கட்டும் இடம் மட்டும் பனி பெய்திருந்தது. இருவரின் செபத்தாலும், முயற்சியாலும், பொருளாலும் கி.பி. 352ஆம் ஆண்டு கட்டத் துவங்கி, கி.பி. 366ஆம் ஆண்டு முடிவடைந்து, “மேரி மேஜர்” “பனிமய மாதா ஆலயம்” என்ற பெயரோடு “பசிலிக்காவாக” மரியின் முதல் பேராலயமாக இன்றும் திகழ்கிறது.

.பசிலிக்கா என்பது ஒரு கிரேக்க மொழிச் சொல். “அழகிய எழில் மிகுந்த அரச மண்டபம்” என்று பொருள்.

“அன்னை ஓர் ஆலயம்” என்பதற்கிணங்க தூத்துக்குடியில் கடற்கரை பகுதியில் அமைந்திருக்கும் பனிமய மாதாவின் (பசிலிக்கா) திருவிழா ஆகஸ்டு 5ஆம் நாள் இத்தாலியில் “மேரி மேஜர்” ஆலய அர்ச்சிப்பு திருவிழா கொண்டாடும் அதே தினம் கொண்டாடப்படுகிறது. இவ்விழா 444வது ஆண்டு விழாவாக, முத்து மாநகரில் (தூத்துக்குடி) மக்களால் மனநிறைவோடு கொண்டாடப்படுகிறது.

அழகே, முழுமதியே! தாயே! என்று தஸ்நேவிஸ் மாதாவைப் புகழ்ந்து, இறை வார்த்தையைத் தியானித்து, அன்னையின் இறையருளைப் பெறுவோமாக! .



ரோஸ் சேவியர்



# இறைவனின் மீட்புத் திட்டத்தில் பனிமயத் தாய்

மாதா கோயில் பொருட்காட்சி, மைதானத்தில் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. பீட்டர் தான் கொண்டு வந்த இரண்டு ரூபாயில் ஒரு ரூபாய்க்கு நுழைவுக் கட்டணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு உள்ளே நுழைந்தான். கையில் மீதமிருந்த ஒரு ரூபாய்க்கு சிறிய விளையாட்டு சாமானை வாங்கி மகிழ்ச்சியுடன் இல்லம் திரும்ப நினைத்தான்.

அருகே வந்த நண்பர் பட்டாளம் "ஏய், பீட்டர் இங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்க, வா வளையம் விளையாடலாம்" என்று அழைத்தனர். தன்னிடம் வேறு பணம் இல்லாததால் தயங்கினான்.

"வா பீட்டர் நான் உனக்குப் பணம் செலுத்துகிறேன், நீ விளையாடு" என்றான் நண்பன். பீட்டர் எறிந்த வளையத்துக்கு ஒரு சோப் கிடைத்தது. மற்றவர்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை.

பக்கத்துக் கொட்டகையிலிருந்து விளம்பரம் ஒலிபெருக்கி கடற்கரை காற்றில் நண்பர்களின் காதுகளில் அலைமோதியது. "நடனக் கலா இரசிகர்களே இன்னும் சற்று நேரத்தில் நடனம் ஆரம்பமாகப் போகிறது. சீக்கிரம் நுழைவுச் சீட்டைப் பெற்று அரங்கத்தினுள் வருமாறு அன்புடன் அழைக்கிறோம்" என்று ஒலித்தது.

மற்ற நண்பர்கள் அங்கே படையெடுத்துச் சென்றனர். ஒரு நண்பன் மட்டும் "பீட்டர் அந்த சோப்பை யாரிடமாவது விற்றுவிட்டு நீயும் நடனம் பார்க்க வா" என்று சொல்லிச் சென்றான்.



கையில் சோப்புடன் நின்றவனை, "தம்பி இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்றார் முன்பின் பார்த்திராத குடும்ப நண்பர்.

அவரிடம் நடந்ததைச் சொன்னான்,

"அவர்கள் போகட்டும். உனக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராது. உங்கள் குடும்பம் பனிமயத் தாயின்மேல் பக்தி உள்ள குடும்பம். உன் அம்மா தினசரி திருப்பலி தவறமாட்டார்கள். உன் அப்பா நற்கருணைப் பவனி, சப்பரப் பவனி போன்றவற்றில்



முன்னின்று தன்னார்வத்துடன் உழைப்பவர். பேசாமல் சோப்பை வீட்டில் கொண்டு கொடு” என்று அன்புடன் அனுப்பி வைத்தார்.

இது நடந்தது 1970ஆம் ஆண்டு. பள்ளிப்படிப்பை முடித்ததும் பீட்டர் அவனது குடும்ப சூழ்நிலைக்கேற்ற இரண்டு ரூபாயுடன் பொருட்காட்சிப் பயணத்தை முடித்துக் கொண்டு சோப்புடன் வீடு திரும்பினான்.

ஐந்தாம் நாள் திருவிழா மறையுரையில் இதைச் சொல்லி முடித்த அருட்தந்தை அருகில் இருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தபின் தொடர்ந்தார்.

“அன்றைய தினம் பொருட்காட்சியில் என்னை நல்வழிப்படுத்தியவர் யார்? என்பது எனக்கு நினைவில்லை, ஆனால், பனிமயத் தாயின் பாசப் பிள்ளைகளில் ஒருவராகத்தான் அவர் இருப்பார் என்று நம்புகிறேன்” என்றார்.

“ஏனென்றால் பனிமயத் தாய் தன்மேல் பாசமுள்ள பிள்ளைகள் எந்தச் சூழ்நிலையிலும் மகனுடைய மீட்புத் திட்டத்தை விட்டு விலகிச் செல்லவிடாமல் தக்க துணையை அனுப்பி பாதுகாத்து வருபவர். என் பெற்றோரின் எண்ணப்படி இன்று நான் பனிமய மாதா பேராலயத்தில் நற்செய்தி முழங்கிக் கொண்டிருக்கிறேன்” என்று தன் மறையுரையை நிறைவு செய்தார்.

அருகே நாற்காலியில் அமர்ந்து மறையுரையைக் கேட்டுக் கொண்டிருந்த வயதான அருட்தந்தை பிலோமின்ராஜ் எழுந்து வந்து அருட்தந்தை பீட்டரைத் தட்டிக் கொடுத்து, ஒலிவாங்கியின் முன் நின்றார். “அருட்தந்தை பீட்டர் கூறிய ஆலோசகர் நான்தான். அப்போது நான் கேரளாவில் குருமடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். தட்டார் தெருவில் இருந்த பீட்டரின் குடும்பத்தைப் பற்றி மேலத் தெருவில் வசித்த என் குடும்பத்தினருக்கு நன்கு தெரியும் என்றார். அதன்பின்னர் இப்போதுதான் அவரை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை பனிமயத் தாய் தம் பேராலயத்தில் வழங்கியுள்ளார்கள்” என்றார்

ஆலயத்தில் இருந்த அனைவரும் புன்னகை பூத்தவாறு மெல்லிய கைதட்டலை ஒலித்தனர். அருட்தந்தை பீட்டர் அருட்தந்தை பிலோமின்ராஜைக் கட்டிப்பிடித்து பின்னர் முதுகை வளைத்துக் குனிந்து தலைவணங்கித் தன் நன்றியைக் காணிக்கையாகச் செலுத்தினார். இரு அருட்தந்தையரின் கண்களும் ஈரமாயின.



**ம. வெனான்சியுஸ்**

அடுத்த மாத இதழ்,
**“ஆசிரியர் மாணவர் உறவு”**
எனும் தலைப்பில்
**ஆசிரியர்கள் மாணவர்களுக்கான**
சிறப்பிதழாக வெளிவருகின்றது.
படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

## *வாழ்த்துகின்றோம்*

### புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 16. | ஆண்டனி ஜூடுவின் | சாஜி - சோனி | 12.07.2026 | லூர்து மாதா |
| 17. | ஆன் ஜாஸ்னி | சாஜி - சோனி | 12.07.2026 | லூர்து மாதா |
| 18. | ஜிஃபான் பெஸ்கி | ஆல்வின்-இன்பண்டா | 19.07.2026 | காவல் தூதர் |





# பனிமயத் தாய் பேராலய வரலாறு

## (தூத்துக்குடி திருத்தலம்)

தூத்துக்குடியின் வங்கக் கடற்கரையினில் அமைந்துள்ள, 444 ஆண்டுகளுக்கு மேலான பாரம்பரியம் உடைய திருத்தலம் பரிசுத்த பனிமயத் தாயின் பேராலயம். கி.பி.16ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய பக்தர்களால், போர்ச்சுக்கீசிய பாணியில் நிறுவப்பட்ட இத்திருத்தலம், வரலாற்றுச் சிறப்பு மற்றும் அற்புதங்களால் மிகவும் போற்றுதலுக்கு உரியதாகத் திகழ்கிறது.

### கப்பலில் வந்த மாதா

தூத்துக்குடியில் வீற்றிருக்கும் பனிமய மாதா சுரூபமானது தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்ததே மிகவும் அற்புத நிகழ்வு. தஸ்நேவிஸ் மாதாவின் சுரூபம் ஒன்று மரப்பேழையில் வைக்கப்பட்டு காலே தீவில் இருந்து "சந்தலேனா" என்ற கப்பல் மூலம் கி.பி.1555ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் தேதி தூத்துக்குடி வந்தடைந்தது.

கி.பி. 1582இல் இயேசு சபைக் குருக்கள் சிற்றாலயத்தில் அன்னையின் சுரூபத்தை வழிபட்டனர். பின்னாளில் தூத்துக்குடி பங்குத் தந்தையாக இருந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த விஜிலியஸ் மான்சி இச்சுரூபத்தை தென்னங்கீற்றால் வேயப்பட்ட, மண்சுவரால் ஆன குருக்கள் இல்லத்தில் அமைத்தார்.

### இடி தாங்கிய அன்னை

கி.பி. 1707ஆம் ஆண்டு, ஏப்ரல் 4ஆம் நாள் நள்ளிரவில் இடி மின்னலோடு பெருங்காற்று வீசுகையில், அருட்தந்தை. மான்சி, மாதா சுரூபம் முன் மண்டியிட்டு ஜெபித்துக் கொண்டிருக்கையில், அன்னை சுரூபத்தை இடி தாக்கியது. எனினும் மாதா சுரூபத்துக்கோ குருவுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. இதன் காரணமாக மக்கள் பனிமயத் தாயை 'இடி தாங்கிய அன்னை' என அழைத்தனர்.

### புதிய ஆலயம்

அன்னையின் அற்புத நிகழ்வினை உலகுக்கு உணர்த்திய அருட்தந்தை மான்சி முற்றும் கற்களாலான ஆலயத்தை 1713ஆம் ஆண்டு ஆகஸ்டு 5ஆம் நாள் அர்ச்சித்தார்.

### பனிமய மாதா பெயர்க்காரணம்

அன்னை மரியாவுக்கு எஸ்கலின் என்ற குன்றின்மீது கி.பி. 352இல் ஆலயம் முதன் முறையாக அமைக்கப்பட்டது. அப்போது போப் ஆண்டவராக இருந்த அருட்தந்தை லிபேரியுஸ் மற்றும் அருளப்பர் என்ற பெரும் செல்வந்தருக்கும் அன்னை மரியா பனி பொழியாத கோடை காலத்தில் பனி பொழியச் செய்து, தனக்கு ஆலயம் அமைக்க வேண்டிய இடத்தை உரோமையில் அடையாளம் காட்டினார். அதன்பின் உலகின் பல பகுதிகளில் பனிமய மாதா சுரூபத்தைக் கொண்டு பல ஆலயங்கள் அமைந்தன. அதுபோன்ற ஒரு தஸ்நேவிஸ் மாதா சுரூபம் தூத்துக்குடிக்கும் கப்பலில் வந்து சேர்ந்தது. மேலும் எஸ்கலின் குன்றுமீது அமைக்கப்பட்ட கோயிலும், தூத்துக்குடியில் உள்ள தஸ்நேவிஸ் மாதா ஆலயமும் ஆகஸ்ட் 5ஆம் நாள் அர்ச்சிக்கப்பட்டதால், 'பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்' என அழைக்கப்பட்டதாக அறிகிறோம்.

1982இல் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இதனை 'Minor Basilica'-வாக பிரகடனம் செய்தார்.

**கரோலின் பிலவேந்திரன்**
உத்தமபாளையம்



# இரண்டு குருவிகள்



ஓர் ஊரில் ஓர் ஏழை நற்செய்தியாளர் இருந்தார். வறுமையில் வாடிய அவரிடம் இருந்ததெல்லாம் ஒரேயொரு நூறு ரூபாய் நோட்டு மட்டும்தான். அவர் இரவிலே சாப்பிடுவதற்காகச் சென்றபோது எதிரே ஒரு சிறுவன் கையிலே ஒரு குருவிக் கூண்டை எடுத்துக்கொண்டு வருவதைப் பார்த்தார்.

அப்போது அந்த சிறுவன், "நான் வைத்திருந்த கண்ணியிலே இந்த மூன்று குருவிகளும் சிக்கிக்கொண்டன. வீட்டுக்குச் சென்றதும், ஒவ்வொரு குருவியினுடைய இறகுகளைப் பிடுங்குவேன். அதை வீசி எறிந்து விளையாடுவேன். முடிவிலே என் பூனைக்கு இரையாகக் கொடுப்பேன்" என்றான்.

அதைக் கேட்டதும் அந்த மனிதனுடைய உள்ளம் உடைந்தது. தன்னிடம் இருந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து சிறுவனிடம் கொடுத்து அந்தக் குருவிகளை வாங்கிக் கொண்டார். பிறகு அவர் தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று அந்தக் கூண்டைத் திறந்துவிட்டார். குருவிகள் மகிழ்ச்சியாக நீலவானில் இன்பமாய் பறந்து சென்றன. அவைகளை விடுவித்த திருப்தி அந்த நற்செய்தியாளருக்கு இருந்தது.

அவர் மனநிறைவோடு படுத்துவிட்டார். அப்பொழுது இயேசு அவருக்கு ஒரு தரிசனத்தைக் காண்பித்தார். சாத்தான் அநேகரை அடிமைப்படுத்தி, சிறைப்படுத்தி, சிற்றின்பம் என்கிற கூண்டுக்குள் அடைத்து இழுத்துச் சென்றுகொண்டிருந்தான்.

வெண்ணிற ஆடை தரித்த ஒருவர் வந்து, "நீ என்ன செய்கிறாய் சாத்தானே?" என்று கேட்டார். அவன் அட்டகாசமாய் சிரித்து, "நான் விரித்த வலையிலே இவர்கள் சிக்கிக் கொண்டார்கள். நான் இவர்களை நரக அக்கினிக் கடலிலே எறிந்துவிடுவேன்" என்றான்.

அந்த வெண்ணிற ஆடை தரித்தவர், "இவர்களை மீட்டுக்கொள்ளும்படி நான் என்ன கிரயம் செலுத்த வேண்டும்" என்று கேட்டார். சாத்தான் அதற்கு "உம்முடைய முழு இரத்தத்தையும் எனக்குக் கிரயமாக செலுத்தினால், இவர்களை உம்மிடத்தில் தந்து விடுகிறேன்" என்றான்.

அப்படியே அந்த வெண்ணிற ஆடை தரித்த மனிதர் சிலுவையிலே தொங்கி, தம்முடைய கடைசிச் சொட்டு இரத்தத்தையும் விலைக் கிரயமாக செலுத்தி, அவர்களை மீட்டுக் கொண்டார்.

உங்களது பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து விடுவிக்க இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சொந்த இரத்தத்தைக் கொடுத்தார்.

"கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள் வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார்; இம்மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் மன்னிப்புப் பெறுகிறோம்" (எபே 1:7).



S.J. சுரேஷ்

## ஆசி கூறுகின்றோம்



### திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 16. | மரிய ஆண்டனி அஸ்வின் - மேரி பெயாட்ரிஸ் ஆந்தியா | சூசையப்பர் | 05.07.2026 |





# விவிலியப் போட்டி 136

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**லூக்கா நற்செய்தி அதிகாரம் 1 முதல் 5 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

## I. ஓரிரு வார்த்தைகளில் விடையளி :

1. நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக இயேசு யாரைப் பார்த்து கூறினார்?
2. மருத்துவம் தெரிந்தவர் யார்?
3. யார் ஆளுநராக இருந்தபோது மக்கள் தொகை கணக்கிடப்பட்டது?
4. ஆரோனின் வழி வந்தவர் யார்?
5. என்னை பின்பற்றி வா என்று இயேசு யாரை அழைத்தார்?

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

6. உன் கடவுளாகிய ஆண்டவரை ____________.
7. இயேசு ____________ அலகையினால் சோதிக்கப்பட்டார்.
8. ____________ சேத்தின் மகன்.
9. ஆண்டுதோறும் பாஸ்கா விழாவை கொண்டாட ____________ போவார்கள்.
10. ஆமோசு ____________ மகன்.

## விவிலியப் போட்டி 135

**ஜூலை 2026** — *விடைக் குறிப்புகள்*

**மாற்கு நற்செய்தி அதிகாரம் 11 முதல் 16 வரை**

| | | |
|---|---|---|
| 1. | மகதலா மரியா | 16:9 |
| 2. | பிலாத்து | 15:5 |
| 3. | பெத்பகு, பெத்தானியா | 11:1 |
| 4. | மறைநூல் அறிஞர்கள் | 12:38 |
| 5. | அதிகாரம் 12 : வசனம் 10 | |
| 6. | தொழுநோயாளர் சீமோன் இல்லம் | 14:3 |
| 7. | யோசேப்பு | 15:43 |
| 8. | யூதாஸ் இஸ்காரியோத்து | 14:10 |
| 9. | நூற்றுவர் தலைவர் | 15:39 |
| 10. | அத்திமரம் | 11:13,14 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 10.08.2026**

இந்த தேதிக்குள் வந்துசேரும் விடைத்தாள்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும்.

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**95974 81624** (வாட்ஸ் அப் மட்டும்) — அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 197

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 116**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

## பரிசு பெறுபவர்கள் : 5

1. திவ்விய பாலன் அன்பியம் — **ஸ்டார்லக் ஏஞ்சலின்**
2. பாத்திமா அன்பியம் — **அனு ஆல்வின்**
3. இரக்கத்தின் மாதா அன்பியம் — **இருதயம்மாள் கொன்சால்**
4. காவல் தூதர் அன்பியம் — **ஜூலியஸ் தல்மேதா**
5. குழந்தை இயேசுஅன்பியம் — **சுகிர்தா**

## பாராட்டுக்குரியவர்கள் : 111

**அந்தோனியார் அன்பியம்**
6. பிருந்தா
7. ரீனா மொறாயிஸ்
8. ஜெசி
9. சரோஜா மஸ்கரனாஸ்
10. லீனா கருணா

**அன்னை தெரசா அன்பியம்**
11. ரெய்ஸா சுஜய்

**அன்னை வேளாங்கன்னி அன்பியம்**
12. டென்சி
13. நான்சி
14. அலைனா சந்தலேனா
15. பிரவீனா ரவிக்குமார்
16. ஆல்வின் கவாசினி
17. ஜெரினா செல்வம்.

**கிறிஸ்தரசர் அன்பியம்**
18. லூரட் வசந்த்
19. ஜீலியட் சாவியோ
20. செலஸ்கி கிளமென்ட்
21. ரெக்ஸ் கிரீன்வெல்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
22. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
23. ஆண்டிரியா டாரல்
24. சுரேஷ் பிரேமா
25. சுகன் மோனிஷா
26. ராஜா ஜரீன்

**திவ்ய பாலன் அன்பியம்**
27. சென்சிலா சகாயராஜ்
28. பிரின்சி
29. சகாயராணி தனராஜ்

**பாத்திமா மாதா அன்பியம்**
30. பிச்சம்மாள்
31. ரீனா ராஜா
32. ஜெனிட்டா மைக்கல்
33. ஸ்டெபி ரீகன்
34. சுகந்தா ஸ்டெனி

**இரக்கத்தின் மாதா அன்பியம்**
35. பாப்டிஸ்டா
36. செல்வி புரோ
37. சித்ரா மோத்தா
38. சகாயராணி
39. சேவியர் அம்மாள் கோமஸ்

**ஜெபமாலை மாதா அன்பியம்**
40. சகாயம்மாள் பெனடிக்ட்
41. சேவியர் ஏஞ்சல்
42. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
43. டெரன்சியா அரிஸ்டோ
44. கிறிஸ்டோ ஜெபினா

**காவல் தூதர் அன்பியம்**
45. ஜெயா அகஸ்டின்
46. சார்லட் பிராங்
47. ரஸ்கின் வசந்தா
48. செல்வராணி
49. சாந்தி ஆல்ட்ரின்
50. வெனிட்டாள்
51. பிரிசில்லா
52. ஜோ ட்ரினிஷா
53. எலிஜா இம்மானுவேல்
54. அல்பின்

**குழந்தை தெரசா அன்பியம்**
55. பெனிமுறாய்ஸ்
56. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு அன்பியம்**
57. மோனிகா செபஸ்டின்
58. எமல்டா
59. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா அன்பியம்**
60. ஹெபிட்டா
61. ரொசாரி கோமஸ்
62. வெர்ஜினியா
63. லீமாரோஸ் ஜாய்
64. சகாயராஜா சகாயராணி

**லூர்து மாதா அன்பியம்**
65. ஜெனோ சேவியர்
66. பிலோகோமஸ்
67. ரஜூலா ஜான்போஸ்கோ
68. சாண்டினா
69. லூர்து லினட்
70. ஆலிவர் வி. ராயர்

**மிக்கேல் அதிதூதர் அன்பியம்**
71. ஜோஸ்பின் பர்னாந்து
72. வினோ அந்தோணி

**பனிமய அன்பியம்**
73. சுரேஷ் ஆனி
74. ராணி
75. ஜூடு ரதி
76. அந்தோணிசாமி
77. மெர்ஸி
78. ஜாக்குலின் வினோதினி

**பவுலடியார் அன்பியம்**
79. ராஜா ரோஸ்லின்
80. ஒபிலியா தாமஸ்

**பரிபூரண மாதா அன்பியம்**
81. மெடோனா
82 சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா அன்பியம்**
83. டிஃபானி அன்டோ
84. தெரசா பிரகாஷ்
85. டிரைபேனா
86. சித்ரா அலாய்
87. லூடா கான்ஸ்டன்
88. ஜான்சிராணி அமல்ராஜ்
89. ஃபெலிக்ஸ் சோபியா
90. இம்மாக்குலெட் சதிஷ்

**இராயப்பர் அன்பியம்**
91. டெய்ஸி
92. நேவிஸ் அம்மாள்
93. போஸ்கோ ரெனோ
94. ரொமில்டா வெனான்சியுஸ்

**சவேரியார் அன்பியம்**
95. டெலிலா அமலன்
96. அனுஷியா பீட்டர்
97. ஜாஸ்மிலின் அல்டோ சாலமோன்

**செபஸ்தியார் அன்பியம்**
98. அந்தோனியம்மாள் டென்சிங்
99. சேவியர் ஜெயசீலி
100. ஜெஸிலா சேவியர்

**சிந்தாயாத்திரை மாதா அன்பியம்**
101. டோனஸ் ராயன்
102. ஆர்வின் விபாசித்
103. நேசம்
104. ஜூடி ஆரோக்கியராஜ்

**சிறுமலர் அன்பியம்**
105. விஜிலியா
106. தாயம்மாள்
107. விஜி சகாயராஜ்
108. எல்சிட்டா ஆனந்தன்

**சூசையப்பர் அன்பியம்**
109. மென்சி
110. கிறிஸ் ரீஜோ

**திருச்சிலுவை அன்பியம்**
111. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
112. சரோலின் கில்டன்
113. மரிய இன்பெண்ட் திவ்யா

**வியாகுல மாதா அன்பியம்**
114. ஜெரிஷா
115. புஷ்பா ஜெரிவில்சன்
116. ஸ்டீவ் சான்ஜோ



## II. பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 81

### பரிசு பெறுபவர்கள் : 3

117. சென்னை — **மேமா ஸ்டீபன்**
118. புனித தோமையார் கோயில் — **க்ளெமென்சியா மேக்டன்**
119. புனித குழந்தை திரேசம்மாள் கோயில் — **ஸ்னோ வெண்பா**

### பாராட்டுக்குரியவர்கள் : 78

**சென்னை**
120. ஜெரால்டு
121. ரெஜினா கிரகோரி
122. கமலஜோதி ஜெயசீலன்
123. டெனிசா கிளாட்
124. ஆண்டனிகா ஷெர்லி

**கொடைக்கானல்**
125. ஜெஸிந்தா மார்ட்டின்

**திருச்சி**
126. சிரில் ஜோசப்
127. மோனிட்டா கிறிஸ்டி
128. மேத்யூ விவேக்
129. டோனி

**ஆறுமுகநேரி**
130. தொம்மை அந்தோணி
131. ஜெயராணி

**ஆலந்தலை**
132. மரியம்மாள்
133. தங்கராஜ் பொன்சேகர்
134. சகாயராணி

**திருப்பூர்**
135. ததேயுஸ் கரோலின்
136. பிரான்சிஸ் ஆர்லின்

**வீரபாண்டியன்பட்டணம்**
137, ராகேல் ராயன்

**தருவைக்குளம்**
138. ரூபர்ட் சூர்யா
139. லில்லி சோபியா
140. ஜோஸ்பின் ஷீலா
141. மைக்கேல் ஸ்டிபானி

**கயத்தார்**
142. அமல்ராஜ்

**தென்காசி**
143. பிலேந்திரன்

**மதுரை**
144. ஜெஸிந்தா மேரி

**உடன்குடி**
145. ஸ்நோவின்

**புதியம்புத்தூர்**
146. ஹெலன் அன்னமணி

**சூலூர்**
147. சத்யா சேவியர்

**சருகணி (சிவகங்கை)**
148. சகோ. பெரைறா

**திண்டுக்கல்**
149. ஜெர்மேன்
150. ரோசாலி

**கடலூர்**
151. ஹென்றிதாஸ்

**உவரி**
152. ஆர்லின் ஈவ்லின்

**தேனி**
153. குழந்தை திரேஸ்
154. ரொசாரியோ மேரி ஈவ்லின்

**பேட்டை**
155. ஹெலனிட்டா

**<u>தூத்துக்குடி நகரப் பங்குகள்</u>**

**திரு இருதயங்களின் பேராலயம்**
156. ரமோலா கமிலஸ்
157. டீனுராய் ஜேசுபாலு
158. ஸ்நோசன்
159. கிரேட்டா ராஜா
160. ரெனிஷா ஜெப்ரி
161. பெஸ்டஸ் மச்சாது
162. ஜெயந்தி பீட்டர்
163. ஜோக்கின் கிசிங்கிளி

**குருஸ்புரம்**
164. ஆசிர்வாதம்
165. மெர்ஸி ஜெரால்டு
166. பிளாசி செல்வராஜன்
167. மாசில்லா
168. ஜான்சி மென்டிஸ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
169. டோமினிக்
170. டார்லிமா அமுதன்

**அன்னை வேளாங்கன்னி கோயில்**
171. செக்கரியா சாமுவேல்
172. சலேத் எலிசா

**யூதா ததேயு கோயில்**
173. ரோஸ் சேவியர்
174. இம்மானுவேல் சேகர்
175. ஜெனட் சேவியர்
176. ஆரோக்கிய சர்மிளா
177. சகாயமேரி
178. லூர்து சுவிதா

**அந்தோணியார் கோயில்**
179. இருதயம்மாள் கபிரியேல்
180. வயோலா ஜான்சன்
181. மகேஷ் சுஜாதா
182. ரீடன்

**காந்தி நகர்**
183. ரியாலினோ
184. செலஸ்டின்

**அண்ணா நகர்**
185. வென்சி ராணி

**சார்லஸ் கோயில்**
186. சகாயிட்டா மச்சாது
187. அல்போன்சா பர்னான்டோ
188. ரூபி ஏஞ்சல்

**புனித இஞ்ஞாசியார் கோயில்**
189. அலெக்ஸ் ஜோ ஆனந்த்
190. சூசை நெவின்
191. பாத்திமா ஏஞ்சலின்
192. மரிய சூசைரூபி

**இரத்னபுரம் சவேரியார் கோயில்**
193. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
194. கிருபா
195. ஆடன் ஸ்டேரிஷ்
196. அபின்சா

**பாத்திமா நகர்**
197. மேரி ஹம்லின்



**கடந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 201**
**இந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 197**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல்)

ஆகஸ்ட் 2026

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

### நிகழ்ந்தவை

- **28.06.2026** முதல் இசைக்கருவி (கீபோர்டு) பயிற்சியானது நமது பேராலய வளாகத்திலுள்ள அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்று வருகிறது.
- நமது அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு **"பனிமய நேரலை"** பல்சுவை நிகழ்ச்சியில் ஒளிபரப்பு செய்வதற்காக **11.07.2026 சனிக்கிழமை மற்றும் 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை** நமது பங்குக் குழந்தைகளுக்கான கலைத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.
- **18.07.2026 சனிக்கிழமை** மாலைத் திருப்பலி .ரோச் திடலில் நடைபெற்றது.
- **19.07.2026 ஞாயிற்றுக்கிழமை** திருவிழா அறிக்கைகள் எல்லா திருப்பலிகளிலும் பாடப்பட்டு ஆலய மணிகள் ஒலிக்கப்பட்டன.
- **19.07.2026 ஞாயிற்றுக்கிழமை** நமது பங்கின் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர் தங்களின் திருவிழாவை இரண்டாம் திருப்பலியில் கொண்டாடினர். புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.
- **19.07.2026 ஞாயிற்றுக்கிழமை** காலை 08.00 மணி திருப்பலியை பனிமய மாதா சபையினர் தங்கள் ஆண்டு விழாவாக சிறப்பித்தார்கள். திருப்பலி நிறைவில் புதிய உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.
- **19.07.2026 ஞாயிற்றுக்கிழமை** "பனிமய நேரலை" பல்சுவை நிகழ்ச்சிக்காக, நகரப் பங்குகளின் பாடகர் குழுவினரது பாடல்கள் பதிவுசெய்யப்பட்டன.
- பெருவிழா ஆயத்தமாக **25.07.2026 சனிக்கிழமை** மாலை 06.00 மணிக்கு கொடிப் பவனி, நகரின் தெருக்களில் வலம் வந்து பேராலயம் வந்தடைந்தது. இறைமக்கள் காணிக்கைகளை ஏந்தி வந்தனர்.

### நிகழ இருப்பவை

- **07.08.2026** மாதத்தின் **முதல் வெள்ளி** அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

# பெருவிழா தொடர்பான அறிவிப்புகள்

1. **தெருக்களை ஆயத்தப்படுத்துதல்**

 ★ பின்வரும் நாட்களில் பவனி நடைபெற இருக்கிற தெருக்களை சுத்தமாகவும், போதிய வெளிச்சமாகவும் வைத்துக் கொள்ளவும்.

 **25-07-2026** சனி - கொடிப் பவனி

 **02-08-2026** ஞாயிறு - திவ்விய நற்கருணைப் பவனி

 **05-08-2026** புதன் - சப்பரப் பவனி

 ★ கட்டடப்பணிகள் நடைபெற்றால், கட்டுமானப் பொருட்களை அகற்றவும்.

2. **அலுவலகப் பணிகள் :** பெருவிழா நாட்களில் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் வழங்கப்பட மாட்டாது. வழக்கமான அலுவலகப் பணிகளுக்காக பங்குத்தந்தையரையோ, பங்கு அலுவலகத்தையோ அணுக வேண்டாம்.

3. **நேர்ச்சைப் பால் வழங்குதல் :** பெருவிழா நாட்களில் நேர்ச்சைப் பால் வழங்குபவர்கள் கொடிமர வளாகத்தில் மட்டுமே வழங்க கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. **பிளாஸ்டிக் தடைக்கு ஒத்துழைப்பு :** தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பனிமய அன்னைப் பெருவிழாவை "பிளாஸ்டிக் இல்லாத விழாவாக" கொண்டாட முன் வருவோம். எனவே, பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் பைகள், ஸ்ட்ரா, பிளாஸ்டிக் குடிதண்ணீர் பாட்டில் ஆகியவை பேராலய வளாகத்திற்குள் தடை செய்யப்படுகின்றன. அனைவரும் ஒத்துழைப்பு தாருங்கள்.

5. **பிறமத பக்தர்களுக்கு வரவேற்பு :** பெருவிழா நாட்களில் பரிசுத்த பனிமய அன்னையைத் தரிசிக்க வருகின்ற பிற சபை, பிற சமயங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளை வரவேற்று அவர்களுக்கு ஒத்துழைப்பும், முன்னுரிமையும் கொடுத்து, "பனிமயத்தாய் எல்லாருக்கும் தாய்" என்பதை எண்பிப்போமாக!

*செபிக்கின்றோம்*

## இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 21. | கிரசன்ஸியா வாஸ் | கைத்தான் வாஸ் | 27.06.2026 | சிந்தாயாத்திரை மாதா |
| 22. | ரமணிதாஸ் | ஆரோக்கிய தாஸ் | 28.06.2026 | திருச்சிலுவை |



# 40ஆம் திருமண (ரூபி) ஆண்டு

**25.08.2026**

1986  2026

## T. இருதயராஜ் மஸ்கரனாஸ் - D. சரோ லோபோ

*(இருவரின் 40ஆம் ஆண்டு அன்பு பயணம்)*

மணமகன் தோன்றியது - மந்திர மாநகர்
மணமகள் தோன்றியது - மணவை நகர்
இரு மனங்கள் இணைந்தது - பரிசுத்த பனிமய அன்னை பேராலயத்தில்

குடும்பத்தை கோயிலாய் நினைத்தனரே!
கும்பிட்டு இறைவனை தொழுதனரே!
கலங்கிய காலங்கள் இருந்தாலும்
கடவுளை நம்பி வாழ்ந்தனரே!
அன்பும் பண்பும் கலந்தோங்க
கண்ணியமாய் வாழ்ந்து அன்பர் பலரையும் இணைத்தனரே
பங்கமில்லா பாசத்தோடு எம் பெற்றோரை
நீண்ட காலம் நீரிருவர் வாழ்ந்திடவே, வாழ்த்துகிறோம்!
நீங்காத அன்புடனே போற்றுகிறோம்!

**மகன்**
I.R. தாம்ஸன் மஸ்கரனாஸ் B.Sc.,(Navi. Science)

**மருமகள்**
T. நிக்ஷா மேப்பர் பர்னாந்து B.Tech.

**மகள்**
I.R. நிமஜா மஸ்கரனாஸ் B.Com.,MBA.,SMF
I.R. ஜெர்லின் மஸ்கரனாஸ் B.E.,CHIMA

**மருமகன்**
A. அந்தோணி சிலுவை ராகுல் பர்னாந்து B.E.,GME
F. போரிஸ் எல்ஸ்ட்டின் ரொட்ரிகஸ் B.E.,

**பேரக்குழந்தைகள்**
R. யூஜேனியா கேத்லியா பர்னாந்து
T. ரென்லி பெர்னாஸ் மஸ்கரனாஸ்
R. ஐரிஸ் நியங்கா பர்னாந்து
T. பேரிக் பிரான்சல்

### நன்றித் திருப்பலி

25.08.2026 - மாலை 5.30 மணி செவ்வாய்க்கிழமை
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

# 76வது பிறந்த நாள் நினைவு



மண்ணில்
06.08.1950

விண்ணில்
18.02.2023

## S. ஜோபாய் மச்சாது

வயது : 76

*உயிரோடு உயிராய் கலந்தாய்*
*காணாத ஊருக்கு சென்றாய்*
*விண்ணில் வாழ்ந்தாலும்*
*எங்கள் நினைவில் இருக்கும்*
*உங்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!*

பாசத்தோடு நினைவுகூரும்

S. நட்சத்திரம்

22, குருசடி சந்து, தூத்துக்குடி – 1,
Cell : 9025941422

# 90th Heavenly Birthday

*You are missed more than words can say...*
*Though we can't hold you today,*
*we hold you close in our hearts ..*
*Shine bright up there...*

**Born**
**02.08.1936**



**Died**
**25.11.1993**

# H. DENZIL ROCHE

*Sadly missed along life's way,*
*quietly remembered everyday ...*
*no longer in our life to share,*
*but in our hearts you're always there ...*

*Gone from sight,*
*but forever held within my heart.*

*Not a day goes by that*
*we don't think of you*
*We only wish you were here*
*to make more memories with us.*
*You are so deeply missed.*

***Love,***

***Wife, Children and grandchildren***

*T-3,Shera Gardens, No.2,Appa Garden Street, Kilpauk, Chennai - 600010.*

# 100-ஆம் நாள் நினைவு

"நான் உடலால் உங்களோடு இல்லாவிடினும், உள்ளத்தால் உங்களோடு இருக்கிறேன்" (1கொரி 5:3)



மண்ணில்
15.08.1942

விண்ணில்
21.05.2026

## A. லியோ மச்சாது

வயது : 84

*எங்களை அன்பால் அரவணைத்து,*
*வாழ்க்கைப் பாதையில் வழிநடத்தி,*
*குடும்பத்தின் தூணாக வாழ்ந்த நீங்கள்,*
*உங்கள் அன்பும் பாசமும்,*
*உங்கள் புன்னகையையும்,*
*உங்கள் அன்பான வார்த்தைகளையும்,*
*உங்கள் அக்கறையும் ஆசீர்வாதங்களும்*
*என்றும் எங்கள் வாழ்வில் வழிகாட்டும்.*

**உங்கள் பிரிவால் வாடும்**

**மனைவி, மகள், மருமகன், பேரன்கள், பேத்திகள்**
மற்றும் **குடும்பத்தினர்**

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
11.03.1970

மறைவு
05.08.2023

# MINDO V. ROYEN M.

*அனுதினமும் எங்களை வழிநடத்தீச் செல்கின்றாய்!*
*பாதையில் இருந்த முட்களை நீக்க*
*நம் அன்னையிடம் பரிந்துரைக்கிறாய்!*
*வியக்கிறோம் நாங்கள்...*
*முட்கள்கூட மலர்களாக மாறுவதைக் கண்டு..!*
*உணர்கின்றோம்...*
*மலர்களாக நாங்கள் மணம்வீச*
*உதவும் உமது நினைவுகளை எண்ணி..!*
*தொடர்கின்றோம்...*
*இந்தப் பயணத்தை அளவு கடந்த அன்புடன்....*
*என்றும் உம் நிழலில் நாங்கள்...*
*எம் நினைவில் நீங்கள்...*

**பிரிவால் வருந்தும்**

**மனைவி, மக்கள் மற்றும் குடும்பத்தினர்**

# 3ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## உனைப்போல யாருண்டு??



*அம்மா!!!... தாயே!!!... எங்களின் ஏக்கமே...*
*உலகத்தைவிட்டகன்ற கண்மணியே,*
*தேவைகள் தீர்த்த தேவதையே,*
*போற்றுதலுக்கரிய பொக்கிஷமே,*
*வீழ்த்தமுடியா விடிவெள்ளியே,*
*இருள் அழித்த ஒளியே,*
*நிஜமாய் நீயில்லை இனியே...*
*துன்பம் துடைத்த தூயவளே,*
*இன்பம் பல தந்த இனியவளே,*
*பாசம் ஊட்டிய பனிமலரே - இனி*
*எங்களுக்கு உனைப்போல் யாருண்டு???*
*ஓய்ந்து விட்ட ஓவியமே!*
*கரைந்து விட்ட காவியமே!*
*வளரமுடியாத வளர்பிறையே - நீ*
*வரமுடியாதே மறுமுறையே...*

*உம் நினைவுகளால் உள்ளம் கலங்குகிறோம்*
*உம்மைப் போல வாழ நினைக்கிறோம்*
*உம்மை மறுக்காமல், நீ கற்றுத்தந்தவற்றை மறக்காமல் என்றும் வாழ்வோம்*
*உம் வழியில் அம்மா உம் வழியில்...*

# பிலோ சோரீஸ்

**தோற்றம்**
**16.04.1955**

**மறைவு**
**01.08.2023**

அன்புக் கணவர் : **பயஸ் சோரீஸ்**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உற்றார் உறவினர்கள்**

27A, கிரகோப் தெரு, தூத்துக்குடி - 1.

# நினைவு அஞ்சலி

"நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்து வருகின்றது" (திபா 37:39)

## மூன்றாம் ஆண்டு



தோற்றம்
31.12.1947

மறைவு
30.08.2023

**A.சரோஜா பர்னாந்து**

## 10ஆம் ஆண்டு



தோற்றம்
17.01.1937

மறைவு
28.05.2016

**P. அந்தோணி பிச்சை பர்னாண்டோ**

## 31ஆம் ஆண்டு



தோற்றம்
19.03.1934

மறைவு
06.05.1995

**Rev. Sr. மேரி சோபியா பாரா T.F.B.C.**

பிரிவால் வருந்தும்

குடும்பத்தினர்



## தூத்துக்குடி

# பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

ஏழுகடல் துறைக்கும் திருமந்திர நகருக்கும் சந்தோஷமான

## திவ்விய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்

## பெருவிழா நிகழ்வுகள் 2026

444 ஆம் ஆண்டு

**25.07.2026 - சனி**

சிறப்பு கொடிப் பவனி

**26.07.2026 - ஞாயிறு**

திருப்பலி, கொடியேற்றம்
அன்னைக்குப் பொன் மகுடம் சூட்டுதல்

**02.08.2026 - ஞாயிறு**

புதுநன்மைத் திருப்பலி
திவ்விய நற்கருணைப் பவனி

**04.08.2026 - செவ்வாய்**
மாலை 07.00 மணி

### பெருவிழா மாலை ஆராதனை

தலைமை :
மேதகு ஆயர் **ஸ்டீபன்** ஆண்டகை
மறையுரை :
மேதகு ஆயர் **நசரேன் சூசை** ஆண்டகை

## 05.08.2026 - புதன் - அன்னையின் பெருவிழா

| | | |
|---|---|---|
| காலை 04.30 மணி | : | முதல் திருப்பலி |
| காலை 05.30 மணி | : | 2-ஆம் திருப்பலி |
| காலை 07.30 மணி | : | பெருவிழாத் திருப்பலி<br>மேதகு ஆயர் **ஸ்டீபன்** ஆண்டகை |
| காலை 09.00 மணி | : | 4-ஆம் திருப்பலி<br>பேரருள்தந்தை **ரவிபாலன்** |
| காலை 10.00 மணி | : | 5-ஆம் திருப்பலி<br>மேதகு ஆயர் **இவோன் அம்புரோஸ்** ஆண்டகை |
| நண்பகல் 12.00 மணி | : | 6-ஆம் திருப்பலி<br>மண்ணின் மைந்தர்கள் |
| மாலை 05.00 மணி | : | பெருவிழா நிறைவுத் திருப்பலி |
| இரவு 07.00 மணி | : | பரிசுத்த பனிமயத் தாயின் திருவுருவப் பவனி |
| இரவு 10.00 மணி | : | பரிசுத்த பனிமயத் தாய்க்கு குடும்பங்களை ஒப்புக்கொடுத்தல் |

### நவநாள்களில்

*காலை 04.30 மணி*
செபமாலை
தொடர்ந்து திருப்பலிகள்

*மாலை 03.00 மணி*
தேர்ஸ், செபமாலை,
மறையுரை,
அருளிக்க ஆசீர்

*இரவு 07.15 மணி*
செபமாலை, பிரார்த்தனை,
திவ்விய நற்கருணை ஆசீர்

### அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

**அருள்பணி. ஜான் செல்வம்**, அதிபர், பங்குத்தந்தை
**அருள்பணி. ஜெரால்டு**, உதவிப் பங்குத்தந்தை
**அருள்சகோ. மைக்சன்**, களப் பணியாளர்

துறவியர்
பங்கு மேய்ப்புப் பணிக்குழுவினர்
பக்த சபையினர், இறைமக்கள்

SHINY Ph : 98421 31493